1982 மார்ச் 20]

ஆகவே, அந்த மணலையெல்லாம் உள்ளே போட்டு, புதிய மணலையெல்லாம் மேலே வருவதற்கான ஒரு நிலைமையை இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த மெரினா கடற்கரைக்குச் சென்றாரா என்று தெரியவில்லை. அங்கே அதிக லட்ச ஜனங்கள் நடமாடுகின்ற நேரத்திலே, மேலே இருக்கின்ற மணல் அடியிலும், அடியில் உள்ள மணல் மேலேயும் தானாகவே மாறிக் கொண்டுவருகிற நிலைமை இருக்கிறது. எனவே, தனியாக புதியதாக அதைப் புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மெரினா கடற்கரையிலே உள்ள கிணற்றிலே ஒரு சிறுவன் இறந்துவிட்டதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தச் சிறுவன் இறந்த உடனே, அதற்குள் இறங்கி அவனைப் பாதுகாப்பதற்கு போதிய படிகள் இல்லாத காரணத்தால் பக்கத்திலே உள்ள தீ அணைப்பு படையினர்தான் வந்து காப்பாற்றினார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட கிணறுகளில் ஏறி இறங்குவதற்கான படிகள் அமைக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கிணறுகளில் எல்லாம் படிகள் அமைக்கின்ற அளவிற்கு அது ஒன்றும் பெரிய கிணறு அல்ல.

தருமபுரியில் இயங்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

*வினா எண். 565—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் இயங்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காமல் பட்டதாரி வாலிபர்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதுவரை அவைகளின் உற்பத்தி அளவு என்ன ?

(இ) அவர்களுக்கு மாதம் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

[1982 மார்ச் 20

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தருமபுரி மாவட்டத்தில் பட்டதாரி வாலிபர்களுக்காக சிறிய தீப்பெட்டி உற்பத்தி யாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) : வினாக்களுக்கு இடமில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தால் பட்டதாரி வாலிபர்கள் கஷ்டப்படுகிறார்கள். இன்றைக்கு, தர்மபுரி, நெல்லை, முகவை, கோவை மாவட்டங்களில் ஏராளமான தீப் பட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான குச்சி, அட்டை, இதர மூலப்பொருட்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கஷ்டத்தைப் போக்க எந்த எந்த இடத்தில் என்னென்ன புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் பட்டதாரி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவைச் சங்கம் அமைக்கப்படவில்லை. இனிதான் தொடங்கவேண்டியிருப்பதால் இந்தப் பிரச்சனை எழ வாய்ப்பில்லை.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் இலாபகரமாக இயங்கவில்லை என்பதால் வேலையில்லாத பட்டதாரிகள் இந்தத் தொழிலைத் தொடங்க முன்வரவில்லை. ஆகவே, இதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப்போல அங்கு விரைவில் பட்டதாரிகளுக்காக தீப்பெட்டி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்க இருக்கிறோம். அதன் மூலமாக அவர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு உருவாகும்.

(முற்பகல் 9—20)

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நேற்று சொல்லும்போது இந்தத் தீப்பெட்டி செய்யும் தொழில் அதிக அளவில் நல்லமுறையில் செயல்பட்டு

1982 மார்ச் 20]

வருகின்றது என்று சொன்னார்கள். அப்படி இருந்தும் படித்து பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்லாமல் படிக்காதவர்கள் கூட கூட்டுறவு அமைப்பின்கீழ் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். அந்த ரீதயிலே ஏற் படுத்தி இப்போது இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன் னுரிமை கொடுத்து, வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு முதலில் உதவி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அரசு செய்யும்.

கூடலூர் தாலுகாவில் அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையை நிறுவும் திட்டம்.

வினா. எண். 566—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி பாரா—

(அ) நீலகிரி மாவட்டம்—கூடலூர் தாலுகா அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகளைச் செய்யும் (Plywood) தொழிற்சாலையை நிறுவ போடப் பட்டுள்ள திட்டம் செயல்பட ஆரம்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுதிலிருந்து தொழிற்சாலை உற் பத்தி ஆரம்பிக்கும் ?

(இ) எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தமிழ்நாடு ஒட்டுப்பலகை மற்றும் வினியர்ஸ் தொழிற் கூட்டுறவு தொழிற் சாலை லிமிடெட் பந்தலூரில் 31–3–80-ல் பதிவு செய்யப்பட்டு அதற்குத் தேவையான 10 ஏக்கரா நிலம் நீலகிரி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு ஆண்டிற்குள் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டிடம் கட்டி இயந்திரங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி துவங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத் திட்டம் 53 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS